

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் ஆகியோர் நேற்று முன்தினம் (28.10.2024) காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம். பாணாவரம் இலங்கை தமிழர் மறுவாழ்வு மையத்தில் 96 பயனாளிகளுக்கு ரூ.5.53 கோடி மதிப்பீட்டில் புதிய குடியிருப்புகள் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர். ஜெ.யு. சந்திரகலா, , சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம். முனிரத்தினம், மாவட்ட வருவாய் அலுவலர் ந. சுரேஷ், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருமதி.பா. ஜெயசுதா. ஒன்றியக் குழுத்தலைவர் திருமதி. அனிதா குப்புசாமி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சக்தி. ஒன்றிய குழு துணைத்தலைவர் திருமதி. முனியம்மாள், ஊராட்சி மன்றத் தலைவர் அர்சுணன் மற்றும் பலர் உள்ளனர்.




வடகோவை கிராஸ்கட் சாலையில் உள்ள கோவை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்ற கோவை மாநகர் மாவட்ட முன்னாள் செயலாளர் சிறு.தண்டபாணி அவர்களின் 23 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வில் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் கலந்து கொண்டு அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், கழக தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில்,மாநகராட்சி மேயர் இரா.ரங்கநாயகி,தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆனந்த் குமார்,பொதுக்குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் ம.மதுபதி ச.கார்த்திகேயன், தங்கம் சந்திரசேகர், தலைமைக் கழகப் பேச்சாளர் கோவை சம்பத், இராமநாதபுரம் பகுதிக்கழக செயலாளர் ப.பசுபதி, வட்டக் கழகச் செயலாளர்கள் கே.ராமநாதன், இராமச்சந்திரன், அணிகளின் தலைவர்கள் எமரால்டு பொன்னியின் செல்வன், தென்னவன் சுப்பிரமணி, வித்யா ராமநாதன், அணிகளின் அமைப்பாளர்கள் தேவசீலன், அக்பிரபாலு, கண்ணன், அணிகளின் துணை அமைப்பாளர்கள் பாலசந்தர், itwing திருநாராயணன் சின்னதங்கம், செந்தில், பிரின்ஸ், சி.டி.டி.பாபு, ராஜராஜேஸ்வரி பாபு, ஆர்.எஸ்.புரம் பூபாலன், தொ.மு.ச. விவேகானந்தன், சி.எம்.எம்.முகமது அலி மோகன்குமார், கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.

## கீழ்ப்பாக்கம் அரசு மனநல மருத்துவமனை

# தனியாருக்கு கொடுக்கப்பட மாட்டாது - தன்னார்வலர்களுக்கும் கொடுக்கப்படாது!

### தீபாவளி தீக்காய சிகிச்சைப் பிரிவை திறந்து வைத்து – அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!



சென்னை, அக்.30-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (28.10.2024) சென்னை, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீபாவளி முன்னெச்சரிக்கை சிறப்பு தீக்காய சிகிச்சை பிரிவினை திறந்து வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:

அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி முந்தைய நாட்களில் தீபாவளி முன்னெச்சரிக்கை தீக்காய சிறப்பு சிகிச்சைப் பிரிவு என்பது தொடங்கி வைப்பது என்பது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அந்த வகையில் கடந்த ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டுகளிலும் தீக்காய சிகிச்சை பிரிவினை தொடங்கி வைத்திருக்கிறோம். அந்தவகையில் இந்தாண்டும் தீபாவளி முன்னெச்சரிக்கை தீக்காய சிகிச்சை பிரிவு இன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதில் ஆண்களுக்கு 12 படுக்கைகள் கொண்ட சிகிச்சை பிரிவும், பெண்களுக்கு 8 படுக்கைகள் கொண்ட சிகிச்சை பிரிவும், குழந்தைகளுக்கு 5 படுக்கைகள் கொண்ட பிரிவு என 25 படுக்கை வசதிகள் கொண்ட சிறப்பு தீவிரி சிகிச்சை பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. தீபாவளிக்கென்று பிரத்யேகமாக தொடங்கப்படும் சிகிச்சை பிரிவு இதுவாகும். அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையைப் பொறுத்தவரை கடந்த பல ஆண்டுகளாக சிறப்பாக செயல்படும் மருத்துவமனையாகும்.

1972-ஆம் ஆண்டு பத்மஸ்ரீ டாக்டர்.கே.மாதங்கி அவர்களால் தொடங்கப்பட்டு 1973-ஆம் ஆண்டு 2 படுக்கைகளுடன் கூடிய சிகிச்சை பிரிவாக தொடங்கப்பட்டு, 1981-இல் 10 படுக்கைகளாக விரிவாக்கம் செய்யப்பட்டு 1984 இல் 50 படுக்கைகளாக உயர்த்தப்பட்டது. தற்போது அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை நிபுணர்கள், மயக்கவியல் மருத்துவ நிபுணர்கள், செவிலியர்கள், இயன்முறை சிகிச்சையாளர்கள், ஊட்டச்சத்து நிபுணர்கள் போன்றவர்களுடன் கூடிய முழுமையான தீக்காய பராமரிப்பிற்கு பிரத்யேகமாக 75 படுக்கைகள் தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது.

இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு மட்டுமல்லாமல் அண்டை மாநிலங்களிலிருந்தும் தீக்காய சிகிச்சை பிரிவுகளுக்கு சிகிச்சைகள் பெற்று பயன்பெற்று வருகிறார்கள். மேலும் சிகிச்சை பெறும் நோயாளிகளின் தேவையை கருத்தில் கொண்டு அண்மையில் தோல் வங்கி இங்கு தொடங்கப்பட்டது. இந்த தீவிர சிகிச்சை பிரிவு ICU வார்டுகளில் Laminor Flow எனப்படும் தொழில்நுட்பம் சிறப்பான வகையில் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இதனால் தீக்காயங்களில் ஏற்படுகின்ற தொற்று வெகுவாக குறைக்கப்படுகிறது. இந்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஆண்டுதோறும் சராசரியாக 2000 என்கின்ற அளவில் தீக்காய நோயாளிகள் பயன்பெறுகிறார்கள்.

குறிப்பாக சுடு தீக்காயங்கள், மின் தீக்காயங்கள், ஆசிட் காயங்கள், பட்டாசுகளினால் ஏற்படும் தீக்காயங்கள், இரசாயன தீக்காயங்கள் என்று பல்வேறு காரணங்களினால் 2000 பேர் வரை இங்கு பயன்பெற்று சென்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டு தோறும் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, எடுக்கப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக தீபாவளி பண்டிகை காலங்களில் பட்டாசுகள் வெடித்து அதனால் ஏற்படும் காயங்களின் எண்ணிக்கை என்பது தொடர்ச்சியாக குறைந் திருக்கிறது.

இன்று 2 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. நம்முடைய தமிழ்நாடு தீயணைப்புத்துறையின் சார்பில் பாதுகாப்பாக பட்டாசுகள் வெடிக்க வேண்டும் என்பது குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தினார்கள். அதோடுமட்டுமல்லாமல் இம்மருத்துவக்கல்லூரியில் படிக்கின்ற மருத்துவம் சார்ந்த மாணவர்கள், விழிப்புணர்வு நாடகம் நடத்தினார்கள். அதோடுமட்டுமல்லாமல் இம்மருத்துவமனை சார்பில் துண்டு பிரச்சுரம் ஒன்று வழங்கப்பட்டிருக்கிறது.

செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால் குழந்தைகள், வயதானவர்கள், நோயாளிகள் இருக்கின்ற இடங்களில் பட்டாசு வெடிக்கக்கூடாது என்றும், செல்லப்பிராணிகள் அருகில் பட்டாசு வெடிக்க கூடாது என்றும், பட்டாசு பற்றவைக்கும் போது குனிந்து முகம் அருகில் இருக்கின்ற வகையில் பட்டாசு வெடிக்க கூடாது என்றும், பட்டாசு கையில் வைத்து கொளுத்தக் கூடாது என்றும், வெடிக்காத பட்டாசுகளை கையில் எடுத்து பிரித்து பார்க்க கூடாது என்றும், பட்டாசில் உள்ள மருந்தை எடுத்து தனியாக பற்ற வைப்பது கூடாது என்றும், பட்டாசு நிறைந்த பையினை வெடிக்கும் இடத்திற்கு அருகே வைக்க கூடாது என்றும், கால் சட்டைப் பையில் பட்டாசு வைத்துக் கொண்டு இன்னொரு பட்டாசு வெடிக்க கூடாது என்றும், காலிப்பெட்டிகளை அடுக்கி அதனருகில் பட்டாசுகளை வைத்து வெடிக்க கூடாது என்றும், சாதாரண குப்பைகளில் வைத்து பட்டாசுகளை வைத்து வெடிக்க கூடாது என்றும் இன்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

இப்படியெனில் எப்படி பட்டாசுகள் வெடிக்க வேண்டும் என்று இரு நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது. குழந்தைகளைப் பொறுத்தவரை பெரியவர்களின் கண்காணிப்பில் மட்டுமே பட்டாசுகளை வெடிக்க அறிவுறுத்த வேண்டும், குழந்தைகளை தனியாக பட்டாசு வெடிக்க அனுமதிக்க கூடாது. பட்டாசு வெடிக்கும் போது விலையுயர்ந்த ஆடைகளை அணிந்து வெடிப்பது ஆபத்தானது, அதற்காக பருத்தி ஆடைகளை அணிந்து பட்டாசு வெடிக்க அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. பட்டாசு வெடிக்கும்போது செருப்பு அணிந்து வெடிக்க வேண்டும், பட்டாசு வெடிக்கும்போது அருகில் ஒரு வாலியில் தண்ணீர் வைத்துக் கொண்டு பட்டாசு வெடிக்க வேண்டும். மேலும் திறந்த காற்றோட்டமான இடத்தில்தான் பட்டாசுகள் வெடிக்க வேண்டும், ஒருவருக்கொருவர் இடைவெளி விட்டு பட்டாசுகள் வெடிக்க வேண்டும், ராக்கேட் போன்ற பட்டாசுகளை நேர்நிலையில் வைத்து வெடிக்க வேண்டும், வெடித்த பட்டாசு குச்சிகளை மண்நிறைந்த வாலிகளில் போட வேண்டும் என்று பல்வேறு அறிவுறுத்தல்கள் அடங்கிய துண்டு பிரச்சுரங்களும் வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பல்வேறு வகையில் மேம்பாட்டு திட்டங்கள் தொடர்ச்சியாக செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனையின் மூலம், தேசிய நலவாழ்வு குழுமம் சார்பில் தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்டார மருத்துவமனைகளில் பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. அந்தவகையில் செவிலியர்கள், இயன்முறை சிகிச்சையாளர்கள், செவிலிய உதவியாளர்கள், நுண்ணுயிரியாளர்கள் போன்ற பலருக்கும் இம்மருத்துவமனை வாயிலாக பயிற்சிகள் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் இம்மருத்துவமனையில் ரூ.358.87 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் 6 தளங்களுடன் கூடிய பிரமாண்டமான கட்டிடம் இம்மருத்துவமனைக்கு கட்டப்பட்டு வருகிறது. 268815 சதுர அடி பரப்பில் 441 படுக்கைகள் கொண்ட கட்டிடம் நிறையும் தருவாயில் இருக்கின்றது. 12 அறுவை அரங்கங்கள், கூட்டு அறுவை அரங்கத்துடன் கூடிய டவர் பிளாக் கட்டிடம், மிக விரைவில் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட உள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு ரூ.8.80 கோடி மதிப்பீட்டில் JICA நிதியுதவியுடன் பல்வேறு தீக்காய சிறப்பு பிரிவில் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் இங்கே தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. ரூ.2.36 கோடி மதிப்பீட்டில் இடைநிலை பராமரிப்பு மையங்கள் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 22ஆம் தேதி தொடங்கி வைக்கப்பட்டது. கடந்த ஆண்டு மே திங்கள் 2 ஆம் தேதி ரூ.2.03 கோடி மதிப்பீட்டில் அதிநவீன சிறுநீரக கல் நீக்க சிகிச்சை மையம் தொடங்கி வைக்கப்பட்டது. 2022 ஜீலை திங்கள் 1 ஆம் தேதி கதிரியக்கவியல் நிறுவனம் இன்று தொடங்கி வைக்கப்பட்டது. ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம் இம்மருத்துவமனையில் தொடங்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் படுக்கை வசதிகளுடன் கூடிய மின்கல ஊர்தி ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

**மனநல மருத்துவமனை**

சமூக வலைத்தளம் வாயிலாக கடந்த 2 நாட்களாக வந்த செய்தியினைப் பார்த்தேன், கீழ்ப்பாக்கம் அரசு மனநல மருத்துவமனை என்பது 100 ஆண்டுகால பெருமைக்குரிய ஒரு மருத்துவமனை, இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு, இதுவரை எந்த முதலமைச்சரும் அம்மருத்துவமனைக்கு சென்று வளர்ச்சி திட்டங்களை திறந்து வைத்தார்களா என்று தெரியவில்லை, ஆனால் நமது முதலமைச்சர் அவர்கள் கடந்த 2022-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் இடைநிலை பராமரிப்பு மையம் ஒன்றை தொடங்கி வைத்தார்கள். அதுமட்டுமல்லாமல் மனநல சேவையினை வழங்குவதற்கு ரூ.40 கோடி மதிப்பீட்டில் 2022 டிசம்பரில் புதிய கட்டிடம் கட்டும் பணியினை தொடங்கி வைத்திருக்கிறார். மிக விரைவில் இந்தக் கட்டிடம் திறந்து வைக்கப்படும்.

அதே மருத்துவமனையில் ரூ.4.62 கோடி மதிப்பீட்டில் அரசு மனமகிழ் மன்றம், அரசு மனநல காப்பகத்தில் பாரம்பரியம் கட்டிடமாக தொடங்கப்பட்டு தொன்மை மாறாமல் இக்கட்டிடத்தை புனரமைக்கும் பணிக்கும் நிதி ஆதாரத்தை தந்து தற்போது அப்பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது.

இதுமட்டுமல்லாமல் மின் காந்த தூண்டல் சிகிச்சை முறையும் அம்மருத்துவமனையில் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதுமட்டுமல்லாமல் ஆட்டிசம் பாதிக்கப்பட்டு கற்றல் குறைபாடு கொண்ட குழந்தைகளுக்கு பன்முக சிறப்பு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. பணியாளர்களைப் பொறுத்தவரை விளையாட்டு போட்டிகளை மாநில அளவிலும், தேசிய அளவிலும் பங்கேற்று மனநலன் பெற்றதற்கு பிறகு பல்வேறு மாநிலங்களுக்கு சென்று விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்று வந்தார்கள், அவர்களை ஊக்குவிக்கும் வகையில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல் நட்புடன் உங்களோடு என்னும் தொலைபேசி திட்டம் இம்மருத்துவமனையில் இருந்துதான் 2022 ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டது. 2022 ஆகஸ்ட் திங்கள் 2 ஆம் தேதி இம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 520 நோயாளிகளுக்கு இந்தியாவில் முதன்முறையாக மனநலன் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு காப்பீடு திட்ட அட்டை வழங்கப்பட்டது. அனைத்து மருத்துவனைகளுக்கும் CSR நிதியுதவி பெற்று மருத்துவமனைகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் இம்மருத்துவ மனைக்கும் CSR நிதியுதவி பெற்று மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆகையால் இம்மருத்துவமனை தனியாருக்கு தாரை வார்க்கப்பட மாட்டாது, தன்னார்வலர்களுக்கு தத்து கொடுக்கவும் படமாட்டாது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.லியோ டேவிட், தீக்காய சிகிச்சை பிரிவு துறைத்தலைவர் மரு.நெல்லையப்பர், மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு. பாஸ்கரன், நிலைய மருத்துவ அலுவலர் மரு.வாணி மற்றும் மருத்துவத்துறை பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.



தஞ்சை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட திருவையாறு பகுதி மக்களின் நீண்ட கால கோரிக்கையான வெண்ணாற்றின் குறுக்கே தென்பெரம்பூரில் புதிய உயர்மட்ட பாலம் அமைப்பதும் தொடர்பாகவும், திருமலை சமுத்திரம் அருகே தேசிய நெடுஞ்சாலையில் வாகனங்கள் சென்று வர இலகுவாக சுரங்கப்பாதை அமைத்திடவும் மேலும் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் சாலை பணிகளை மேம்படுத்திடவும் டெல்லியில் ஒன்றிய போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்கரியை தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தார்.

## தாராபுரம் நகராட்சி மற்றும் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.9.76 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகள்!

### அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தனர்!

தாராபுரம், அக். 30-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா தலைமையில், தாராபுரம் நகர்மன்றத் தலைவர், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கு.பாப்புக்கண்ணன், தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர், ஒன்றியச் செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார், நகர கழக செயலாளர், நகர்மன்ற உறுப்பினர் எஸ்.முருகானந்தம் ஆகியோர் முன்னிலையில் 21.10.2024 திங்கட்கிழமை அன்று திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சி, திருப்பூர் சாலை வார்டு எண்.2ல் தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் ரூ.26.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாயக் கழிப்பிடத்தை திறந்து வைத்து, அலங்கியம் சிக்னல் தென்புறம் 30 வது வார்டு ஆலடிக்களத்தில் தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் ஆலடிக்களம் பாதை முதல் வடக்கு எல்லையான காமராஜபுரம் வரை ராஜவாய்காலின் பக்கவாட்டில் வடிகால் அமைத்து கழிவு நீர் சேகரிப்பு கிணறு ரூ.9.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கும் பணியினை துவக்கி வைத்து, தாராபுரம் ஒன்றியம், சின்னப் புத்தூர் ஊராட்சி, சத்திரத்தில் கே771 சின்னப் புத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் புதியதாக கட்டப்பட்ட கூட்டுறவு மருந்தகத்தினை திறந்து வைத்து, பொன்னாபுரம் ஊராட்சி, பொன்னாபுரத்தில் டி.டி.2 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தினை திறந்து வைத்து பயனாளிகளுக்கு பல்வேறு கடனுதவிகளுக்கான ஆணை களை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், மாவட்ட துணை செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பிரபாவதி பெரியசாமி, கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் பழனிச்சாமி, தாராபுரம் நகராட்சி ஆணையாளர் திருமால் செல்வம், நகராட்சி பொறியாளர் சுகந்தி, தாராபுரம் நகர்மன்றத் துணைத்தலைவர் ரவிச்சந்திரன், தாராபுரம் ஒன்றியக்குழு துணைத் தலைவர் சசிகுமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சன்பாலு, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் செல்லமுத்து, பொதுக்குழு உறுப்பினர் சிவக் குமார், தாராபுரம் ஒன்றிய கழக துணைச் செயலாளர் செல்வகுமார் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக, வார்டு கழக, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், துறை சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணியில் முழுமையாக ஈடுபடுவீர்!

### மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ. அறிக்கை!



கிருஷ்ணகிரி, அக்.30-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதி யேற்படுத்தும் நாளாகக் தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒசூர், வேப்பனப்பள்ளி, தளி சட்டமன்ற தொகுதிகளில் 29.10.2024 முதல் 28.11.2024 வரை வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனு செய்ய காலஅவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர தலைமை தேர்தல் அதிகாரி அறிவிப்பின்படி 09.11.2024, 10.11. 2024 23.11.2024 24.11.2024 நிர்ணயிக்கப்பட்ட வாக்குச் சாவடி மையங்களில் காலை 09.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.

அதன்படி இந்த நாட்களில் வாக்காளர்களோ தாமாக முன்வந்தோ அல்லது கழகத்தினரோ வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்களர். களின் விவரங்களை சரி பார்த்து விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும் 01-01-2025 அன்று 18 வயது நிரம்ப கூடிய புதிய வாக்காளர்களும் அவர்களது பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்ள அதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 01-01-2025-ஆம் தேதி 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ளவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்த வாக்காளர்கள் மற்றும் இறந்த. வர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6-ம், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7-ஆம் வாக்காளர் விவரங்கள் உள்ள தவறுகளை திருத்தம் செய்ய ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம் முகவரி மாற்றம் நகல் வாக்காளர் அட்டை பெற படிவம் 8-ஆம் அயல் நாடு வாழ் வாக்காளர் சேர்க்க படிவம் 6A, ஆதார் எண், வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6B விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும்.

இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக்கொள்ள வேண்டிய விண்ணப்பப் படிவமான படிவம் 6 முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம் 6 ன் காலம் IV மனுதாரரது முந்தைய முகவரி தவறாது எழுதிட வேண்டும். வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024. பெயர்களைச் சேர்த்தல்நீக்கல் திருத்தம் செய்ய கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை சிறப்பு முகாம் நடை பெறும் நாட்கள் நவம்பர் 16-17 தேதிகள் மற்றும் நவம்பர் 23-24 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் 06.01.2025. மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், வார்டு, வட்ட, கிளை கழக செயலாளர்கள், கவுன்சிலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலைக் குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி இந்த பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் இந்த பணியின் விவரங்களை அவ்வப்போது மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வாக்காளர் சேர்க்கும் பணியின் போது நமது கழகத்தின் சார்பாக நிய மிக்கப்பட்டுள்ள (BLA2) மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் (BLC) ஆகியோர் இந்தப் பணியினை முழுமையாக ஈடுபட்டு 2026 சட்ட மன்றத் தேர்தல் வரை தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள (BLO) க்களுடன் உடன் இருந்து கண்காணிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.



கடலூர் அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 2024 ஆம் ஆண்டிற்கான பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.அய்யப்பன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டம் வழங்கி பயிற்சியாளர்களுக்கு பரிசுகள் வழங்கினார். மேலும் கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ தனது சொந்த நிதி ஒரு லட்சம் ரூபாய் கல்லூரிக்கு வைப்பு நிதியாக வழங்கினார். நிலைய மேலாண்மைக்குழு தலைவர் சத்தியநாதன் சிறப்புரை ஆற்றினார். விழாவில் அரசு கடலூர் மகளிர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் நிலைய தலைமை தாங்கினார். நிர்வாக அலுவலர் காலகண்ணன் வாழ்த்துரை வழங்கினார். இதில் ரேணுகாதேவி, சித்ரா, நிலைய பணியாளர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.